**தலைப்பு 224 – இலங்கை வான்படை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, இலங்கை வான்படைக்கு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர், கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு நோக்கெல்லை**

தலைப்பு 224 – இலங்கை வான்படையின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 அக்தோபர் 05 ஆந் திகதி இலங்கை வான்படைக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும்

பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக இலங்கை வான்படையினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.15 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப் பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128(1) கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|---|
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற்கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்தல். | 1. | பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப் படாமை. | 2.12 |
| | | 2. | பிரதான செயற்பாடு களுக்கு முரணாக செயற்பாடுகள் | 2.1(இ) |
| | | 3. | பெறுகை செயற்பாடு களை செயற்படுத்து வதில் குறைபாடுகள் | 2.3.1 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாடு மற்றும் கணக்கீட்டிற்காக அமைப்பு வெற்றிகரமானது எனவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசுக்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை பிழையின்றியும் தீர்மானிப்பதற்கு அவற்றை முறைப் பிரகாரகும் முற்றாகவும் தாமதமின்றியும் சேகரிப்பதற்கு மற்றும் கிடைக்கும் பணத்தை கணக்கீடு செய்வதற்கும், அரசின் சார்பாக பொறுப்புக்களை மேற்கொள்வதற்கு அதிகாரம் அளிப்பதற்காகவும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குவதின் மேற்பார்வை மற்றும் பரிசோதனை செய்வதற்கு மற்றும் அந்த அரச நிதியத்தில் இருந்து தாமதமின்றியும் பிழையின்றியும் கொடுப்பனவு செய்வதற்கு அவற்றில் போதியளவு ஏற்பாடுகள் மேற்கொள்வது எனவும், | 1. பிரதான செயற்பாடுகளுக்கு முரணாக செயற்பாடுகள் | 2.1(இ) |
| | | 2. பெறுகை செயற்பாடுகளை செயற்படுத்துவதில் குறைபாடுகள் | 2.3.1 |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணங்கள் மற்றும் அரச ஏனைய மேலதிக ஏற்பாடுகள் தமது திணைக்களத்தினால் கடைபிடிக்கப்படுவதாகவும் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள ஏற்பாடுகள் வழங்குவதாகவும், | 1. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை. | 2.12 |
| | | 2. இணக்கமின்மைகள் | 2.13. |
| 128(1)(ஈ) | பெறுவனவுகள், கொடுப்பனவு மற்றும் வினியோகம் என்பவற்றிற்காக போதியளவு உள்ளகச் சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம் முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப் | 1. வருமானக் கணக்குகளில் குறைபாடுகள் | 2.10(அ),(ஆ) |
| | | 2. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறைபாடுகள் | 2.11 |

படுகின்றதெனவும்

| | | | |
|---|---|---|---|
| 128(1)(உ) | அரசுக்கு சொந்தமான அல்லது அரசின் பொறுப்பில் காணப்படும் பணம், பொருட்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவானதும் மற்றும் முறையான ஏற்பாடுகள் மேற்கொள்வதாகவும் அவற்றை இடையிடையே மெய்மையாய்தல் செய்யப்படு வதாகவும், அவற்றை உரிய முறையில் தீர்த்தல் நடவடிக்கை மேற்கொள்ளும் போது அவ்வாறு தீர்த்தல் செய்வதற்கு உரிய பிரமாணங்களுக்கு மற்றும் அறிவுரைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் எனவும்,- | சொத்துக்கள் முகாமைத்துவத்தில் குறைபாடுகள் | 2.4(அ),(ஆ) |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது திறைசேரியால் கேட்கப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள் சரியான காலநேரத்தில் சமர்ப்பிக்கப்படு வதாகவும் | 1. பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்பட்டிருக்காமை<br>2. வருடாந்த செயலாற்றல் அறிக்கை தாமதமாக சமர்ப்பிக்கப்படல் | 2.9(அ)(i)<br>2.2 |
| 128(1)(எ) | அரசாங்கத்திற்கு வருமதியான பணத்தை சேகரிப்பதில் செயன் முன்னேற்றத்தைக் காட்டும் அறிக்கை நாளாந்தம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அனுப்புதல் | வருமானக் கணக்கு தொடர்பான குறைபாடுகள் | 2.10(ஆ)ii |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள கட்டண ங்கள் ஆகியவற்றை அறவீடு செய்வதற்கு விஷேட ஏற்பாடுகள் மேற்கொள்வ தெனவும் அந்த கருமம் சாட்டப்பட்டிருந்த உத்தியோ கத்தவர்களினால் நிலுவை பணம் தொடர்பாக அவற்றை அறவீடு செய்தவை விரைவு படுத்துவதற்காக எடுக்கப்பட்ட கட்டங்கள் தொடர்பாக குறைந்தளவு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அல்லது வேறு முறையில் கட்டளையிட்டுள்ளவாறு தனக்கு அறிவிப்பதாகவும், | 1. வருமானக் கணக்கு களில் குறைபாடுகள் | 2.10(அ)(i)<br>2.10(ஆ)(i) |
| | | 2. அரசாங்க உத்தியோக த்தர்களுக்கான முற் பணக் கணக்கில் நிலுவையான கடன் மீதிகளை அறவிடல். | 2.11 |
| 128(1)(ஐ) | அரசாங்க அலுவல்கள் நிறைவேற்றும் போது எதிர்பார்க்கும் சிக்கனம், வினைத்திறமை, முறைசார் விதமாக மற்றும் நேர்மைத் தன்மை ஆகிய விடயங்கள் தொடர்பாக போதிய கவனத்துடனும் தனது திணைக்களத்தின் அலுவல் கள் மேற்கொள்வதெனவும் | 1. பிரதான செயற்பணிக்கு முரணான செயற்பாடுகள் | 2.1(இ) |
| | | 2. முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.6 |
| | | 3. ஒதுக்கீட்டு கணக்கில் காணப்பட்ட குறைபாடு கள் | 2.9(அ) |
| 128(1)(ச) | உத்தியோகத்தர்களின்/ ஊழியர் களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர் களினால் பின்பற்றப்பட்டதாகவும், நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர் பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள்/ ஊழியர் கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிக்கப்படுமெனவும் | 1. கிரயம் மற்றும் செயற்திறமை இன்றி சொத்துக்களை அகற்று தல். | 2.4(அ) |
| | | 2. சொத்துக்களின் மூலம் அரசுக்கு கிடைக்க வேண்டிய வருமானம் கிடைக்காமை | 2.6 |
| | | 3. நட்டங்களும் சேதங் களும் | 2.7 |
| | | 4. நட்டங்கள் மீதான பொறுப்பு | 2.8 |

**நிதிப் பிரமாணம் 128(2) – அரச வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் கணக்களிப் பொறுப்பு**

| | | | |
|---|---|---|---|
| 128(2)(இ) | வருமானக் குறியீடு தொடர்பாக நிதி ஆண்டின் ஜூன் 30 ஆந் திகதியன்றும் திசெம்பர் 31 ஆந் திகதியன்றும் உள்ளவாறான அரசிறை நிலுவைகளைக் காட்டும் அரையாண்டுத் திரட்டுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் அதிபதிக்கு அனுப்பப்படுகின்றன | அரையாண்டு நிலுவை வருமான அறிக்கை உரிய திகதியில் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்க ப்பட்டிருக்கவில்லை. | 2.10(ஆ) |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றுகை

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை வான்படையினால் 2017 ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் குறிப்பிட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கருமங்கள் நிறைவேற்றப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காணப்பட்ட கருமங்கள் நிறைவேற்றப்படாமை**

2017 ஆண்டிற்கான இலங்கை வான்படையின் செயல் நடவடிக்தைகத் திட்டத்தின் பிரகாரம் ஹிங்குரக்கொட தள முகாமில் புதிய நிர்மாண வேலைகள் என இனங்கண்டிருந்த 06 நிர்மாண வேலைகளில் இரண்டு செயற்திட்டங்களின் அலுவல்கள் மாத்திரம் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்திருந்ததென அவதானிக்கப்பட்டது. நடைமுறை ஆண்டில் இரண்டாம் காலாண்டு அளவில் வேலைகள் பூர்த்தி செய்வதற்கு திட்டமிட்டிருந்த மீதியான 4 நிர்மாண வேலைகளின் அலுவல்கள் 2017 திசெம்பர் 31 ஆம் திகதி அளவிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. ஹிங்குரக்கொடை தள முகாமின் நிர்மாண வேலைகளுக்காக ரூபா 5.55 மில்லியன் மாத்திரம் ஒதுக்கப்பட்டிருந்த காரணத்தினால் அவற்றில் அலுவல்கள் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்படவில்லை என வான் படைத்தளபதியினால் விளக்கமளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மேற்கூறிய விடயத்திற்கு மேலதிகமாக தள முகாமினால் 2017 ஆண்டின் போது கட்டிட திருத்த வேலைகள் மற்றும் முன்னேற்றுவதற்கு எதிர்ப்பார்த்த 13 நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ரூபா 809.67 மில்லியன் ஏற்பாடுகள் வழங்கும் படி விண்ணப்பித்திருந்த போதிலும், செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் ரூபா 10 மில்லியன் மாத்திரம் ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மதிப்பீட்டுச் செலவு ரூபா 16.56 தொகைக்கான 6 நிகழ்ச்சித் திட்டங்களின் வேலைகள் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

**(இ) எதிர்ப்பார்க்கப்பட்ட பலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை**

**பிரதான கருமங்களுக்கு முரணான செயற்பாடுகள்**

இலங்கை வான் படைக்கு உரிய பௌதீக மற்றும் மனித வளம் போலவே நிதியங்களைப் பயன்படுத்தி தனியார் கம்பனி ஒன்றாக நடாத்தப்பட்டு வரும்

ஹெலிடுவர்ஸ் கம்பனி 2010 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை 9 வருடங்களில் ரூபா 54.5 மில்லியன் இலாபம் ஒன்றினை உழைத்திருந்ததுடன் இலங்கை வான்படையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த முதலீட்டின் மூலம் பயன்கள் ஏதும் இலங்கை வான்படைக்கு கிடைத்திருக்கவில்லை.

### 2.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆம் திகதி 402 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை வான் படையினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வறிக்கை 2018 ஜுலை 31 திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெறுகை செய்முறையின் மூலம் வழங்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்ளல்

இலங்கை வான்படையினால் அரச பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் செயற்பட்டு மீளாய்வாண்டிற்கான வழங்கள் மற்றும் சேவைகளுக்காக ரூபா 6,073.9 மில்லியன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 4927.9 மில்லியனுக்கான ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 1,146 தொகை அதாவது வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் 18.86 சதவீத ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தது.

### 2.3.1 பெறுகை செய்முறையினை செயற்படுத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை வான்படையின் M1-17 ஹெலிகொப்டர் என்ஜின்கள் 5 கடுநாயக விமான நிலையத்தில் இருந்து ரஷ்யாவின் Koltsovo விமான நிலையத்திற்கு எடுத்துச் செல்வதற்காக வரையறுக்கப்பட்ட போட்டி விலைமனு முறையின் கீழ் 2017 ஏப்ரல் 17 கூறுவிலைகள் அழைக்கப்பட்டிருந்ததுடன் 2017 மே 18 திகதி நடைபெற்ற பெறுகைக் குழு அங்கீகாரத்தின் கீழ் விலைமனு சமர்ப்பித்திருந்த தனியார் கம்பனி ஒன்றிற்கு பெறுகை அலுவல்கள் சாட்டப்பட்டிருந்தது. நிறுவனத்தின் மூலம் குறிப்பிட்ட சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக கூட்டுத்தொகை ரூபா 1,658,000 தொகைக்கான 5 கட்டளைகள் இலங்கை வான்படையினால் சமர்ப்பித்திருந்த போதிலும் வழங்குனரினால் குறிப்பிட்ட சேவையை வழங்குவதற்காக ரூபா 1,145,830 இற்கான மேலதிக தொகையொன்று செலுத்தும் படி பின்னர் அறிவித்திருந்தது. விலைமனு அழைப்பு பதிவேடுகளில் மேலதிக விலை அதிகரிப்பு தொடர்பாக கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை என தெளிவாக குறிப்பிட்டிருந்த போதிலும் 2017 ஜுன் 28 திகதி அந்த மிகை கிரயங்களும் உட்பட வழங்குனருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை வான்படையின் கடுநாயக தள முகாமின் வழங்கள் மற்றும் பராமரிப்பு பிரிவின் புடவைக் களஞ்சியத்தில் மீளாய்வாண்டு ஆரம்பத்தில் Material drill Khaki இனத்தைச் சேர்ந்த 23,382 மீற்றர் புடவை இருப்பு ஒன்று காணப்பட்ட போதிலும் ஆண்டின் போது ரூபா 22,418,055 பெறுமதியான 61,948 மீற்றர் புடவை கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் போது வழங்கியிருந்த 26,548 மீற்றர் புடவை மாத்திரமே. அதன் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு களஞ்சியத்தில் ரூபா 21,468,234 தொகை பெறுமதியான 58,782 மீற்றர் புடவை இருப்பு ஒன்று காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. போதியளவு புடவை இருப்பு ஒன்று மீதியாக இருந்த போதிலும் ஆண்டின் போது அதே இனத்தை சேர்ந்த புடவை

கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்த காரணத்தினால் பாரிய புடவை இருப்பு ஒன்று களஞ்சியத்தில் மீதியாக காணப்பட்டதென கண்டறிப்பட்டது.

(இ) இலங்கை வான்படையின் 25 முகாம்களுக்காக உரிய மட்டை உடனான தேங்காய்கள் கொள்வனவு செய்வதற்காக கிலோகிராம் ஒன்றிற்கான உடன்படிருந்த விலை ரூபா 39.20 முதல் ரூபா 41.00 இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டதுடன் 2017 ஜுன் 16 ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரினால் அந்த உடன்பட்ட தொகையை ரூபா 65 வரை பின்னர் அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக இலங்கை வான்படையினால் தேங்காய் வழங்குனர்களுக்கு உடன்பட்ட தொகையை விட ரூபா 7,518,132 தொகை மிகையாக செலுத்தியிருந்தது. அது தவிர இலங்கை வான்படைக்கு பச்சை தேங்காய் கொள்வனவு செய்வதற்காக வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 26,881,824 தொகை எனினும் அது தவிர 2017 ஆண்டின் போது ரூபா 48,570,821 இற்கான தொகை ஒன்று மாவாக்கப்பட்ட தேங்காய்ப் பால் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்தது. மேலும் 07 முகாம்கள் தவிர ஏனைய அனைத்து முகாம்களுக்காக பச்சை தேங்காய் வழங்குவதற்காக கடந்த பல வருட காலமாக இடையறாமல் ஒப்பந்தவேலை ஒரே ஒரு தனியார் கம்பனிக்கே கிடைத்திருந்தது.

**2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

இலங்கை வான்படையின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

**(அ) வாகனப் பயன்பாடு**

2016 மற்றும் 2017 ஆண்டுகளின் போது இலங்கை வான்படையினால் மோட்டார் வாகனங்களை கைதவிர்ப்பு செய்யும் போது பெறுமதி மதிப்பீட்டுத் தொகையை விட குறைந்த பெறுமதிக்கு 44 மோட்டார் வானங்களை விற்பனை செய்த காரணத்தினால் ரூபா 3,794,200 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் அவ் வாகனங்களின் கைதவிர்ப்பு தொடர்பான தகவல்கள் அடங்கிய கோவைகள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

**(ஆ) விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தியவாறு சில சொத்துக்கள் விளைவற்றும் அல்லது குறை பயன்பாட்டுடன் காணப்பட்டதென தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

(i) ஹிங்குரக்கொட வான்படை முகாமில் கட்டிடங்கள் சிவில் பொறியியலாளர் பிரிவுக்கு உரிய களஞ்சிய வளவில் காணப்பட்ட 09 வகையை சேர்ந்த 2446 இருப்பு விடயங்கள் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. 2010 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த வளவினை மறைப்பதற்காக பயன்படுத்தப்படும் அலுமினியம் தகடு துண்டுகள் (Diamond Washer - 531002200) 338 கிலோ மெதுவாக அசையும் சொத்துக்கள் என காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது.

(ii) இலங்கை வான்படையின் வீரவில முகாமில் ரூபா 218,800 தொகை பெறுமதியான Iron Kapnail (1½) ஆணிகள் 547 கிலோ கிராம் ஒரு வருடத்தை விட கூடுதலான காலம் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

(iii) கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் இலங்கை வான்படைக்கு சொந்தமான 2130 மோட்டார் வாகனங்கள் காணப்பட்டதுடன் அவற்றில் 257 மோட்டார் வாகனங்கள் மீளாய்வாண்டின் போது எவ்விதத்திலும் ஓட்டப்படாமல் வாகன செயற்களத்தில் விளைவற்றுக் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. மேலும் வேறு 352 மோட்டார் வாகனங்கள் மீளாய்வாண்டின் போது 1,000 கிலோ மீற்றர்களை விட குறைவான தூரம் ஓடியிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(iv) ஹிங்குரக்கொட வான்படை தள முகாமில் புடவைக் களஞ்சிய வளவில் 2017 ஆகஸ்ட் 18 திகதி அளவில் வெள்ளை டீசேட்களுக்கு தேவையான ரூபா 18,158,380 தொகை பெறுமதியான 53,407 மீற்றர் புடவை 1½ வருடங்களை விட மிகையான காலம் முதல் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டதென பௌதீகப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. மேலும், இந்த புடவை இருப்பு நிறம் குறைந்திருப்பதனால் பயன்படுத்த முடியாத நிலைமையொன்று அவதானிக்கப்பட்டது. அது தவிர உத்தியோகத்தர்களின் சீருடைகளுக்கு தேவையான 3 வகையைச் சேர்ந்த ரூபா 16,150,810 தொகை பெறுமதியான புடவைகள் 02 வருடம் முதல் 05 வருடங்கள் வரை பயன்படுத்தப்படாமல் மேற்கூறிய களஞ்சியத்தில் காணப்பட்டதென பௌதீகப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(v) கிடைத்திருந்த தகவல்களின் பிரகாரம் இலங்கை வான்படைக்கு சொந்தமான 119 தாக்குதல் மற்றும் பிரயாணிகள் விமானங்கள் காணப்பட்டதுடன் அவற்றில் 62 விமானங்கள் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

## 2.5 ஈடுபாட்டு பொறுப்புக்களும் பொறுப்புக்களும்

### வருடாந்த பாதீட்டு எல்லையை மிகைத்து ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அணுகுதல்

2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 02(அ) பந்திக்கு இணங்காத முறையில் 05 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 2,118.1 மில்லியன் ஏற்பாடுகள் ரூபா 58.65 மில்லியன் இனால் மிகைத்து ரூபா 64.6 மில்லியன் இற்கான ஈடுபாட்டுப்பொறுப்பு ஒன்று ஏற்பட்டிருந்தது.

## 2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை வான்படையினால் அணுகியிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறைசார் தன்மை இன்றிக் காணப்பட்டது. அவதானிக்கப்பட்ட அவற்றானான சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) 2011 நவம்பர் 30 ஆம் திகதிய 852 ஆம் இலக்க வான்படைத் தளபதியின் வான்படைக் கட்டளை இலக்கம் 05 பந்தியின் பிரகாரம் இலங்கை வான்படை தலைமையகத்தில், பல்வேறு முகாம்கள் மற்றும் அலகுகளில் செயற்பாடுகளுக்காக உள்ளக நிதியங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்து. இந்த நிதியங்களின் செயற்பாடுகளுக்காக மற்றும் நிதியத்தினால் செயற்படுத்தப்படும் இலாபம் உழைக்கும் செயற்திட்டங்களுக்காக இலங்கை வான்படைக்கு சொந்தமான பௌதீக மற்றும் மனித வளங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தது. நிதிப்பிரமாணம் 154 இன் பிரகாரம் இந்த உள்ளக நிதியங்கள், நியதிச் சட்ட நிதியங்களாக நிறுவப்பட்டிருக்காமையால் அவற்றின் அலுவல்கள் திறைசேரியின் மற்றும் இலங்கை பாராளுமன்றதின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

மேலும் 2016 ஜூலை 29 ஆம் திகதிய 7/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரை மற்றும் 2015 செப்டம்பர் 21 ஆந் திகதிய 1933/15-2015 இலக்கங் கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ளவாறு நிதியத்தை மீளாய்வு செய்து சுற்றறிக்கையின் மூலம் சமர்ப்பித்திருந்த படிவத்தின் பிரகாரம் அதனை வழங்கிய நாள் முதல் 14 நாட்களுக்குள் அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இலங்கை வான்படையால் நடத்தப்படும் நியதிச் சட்ட ரீதியான மற்றும் நியதிச் சட்டரீதியல்லாத நிதியங்களில் 7 நிதியங்களின் தகவல்கள் மாத்திரம் 2016 செப்தெம்பர் 02 திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஏனைய நிதியங்கள் மீதான தகவல்கள் அரச நிதி பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கும் முன்னேற்றம் பற்றி கணக்காய்விற்கு அறிவித்திருக்கவில்லை. அது தவிர மேற்கூறிய நிதியம் தொடர்பாக வருடாந்த கணக்காய்வுகள் இலங்கை வான்படையின் நிறைவேற்று கணக்காய்வுப் பிரிவின் மூலம் நடாத்தப்படுகின்றது. இலங்கை வான்படைத் தளபதியினால் விளக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஆ) 2016 ஜூன் மாதம் 24 ஆம் திகதி நடைபெற்ற இலங்கை வான்படையின் செயலாற்றலை மீளாய்வு செய்வதற்கான அரச கணக்கு குழுவின் கூட்டத்தின் கட்டளைகளின் மூலம் முப்படைகளினால் செயற்படுத்தும் பொதுக் கொள்கை ஒன்றின் மீது கணக்காய்விற்கு இணங்கும் வித்தில் தொடர்ந்தும் நடாத்திச் செல்லப்பட வேண்டிய முறை தொடர்பாக அறிக்கையொன்று தயாரிப்பதற்கும் அரச ஈடுபாடுகளுக்காக நியாயமான சதவீதம் கிடைக்கப்பட வேண்டுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டது. இது தொடர்பாக எடுத்திருந்த நடவடிக்கைகள் தொடர்பாக விபரங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

**2.7 இழப்புக்களும் சேதங்களும்**

அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 259/2017 இன் பிரகாரம் தயாரித்திருந்த இழப்புக்களும் கைவிடல் தொடர்பான கூற்றின் பிரகாரம் 05 வருடங்களை விட குறைவாக 219 சம்பவங்கள் தொடர்பாக ரூபா 958,875,319 தொகையும் 5 மற்றும் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட 35 சம்பவங்கள் தொடர்பாக ரூபா 48,956,492 தொகையும் 10 வருடங்களை விட கூடிய சம்பவங்கள் 25 தொடர்பாக ரூபா 11,891,529 தொகையும் ஆக மொத்தமாக 279 சம்பவங்களுக்காக ரூபா 1,019,723,340 தொகையொன்று அறவீடு செய்வதற்கு, பதிவழிப்பதற்கு அல்லது கைவிடுவதற்கான இழப்புக்கள் என அறிவிக்கப்பட்டிருந்தது.

**2.8 சேதங்கள் தொடர்பான பொறுப்புக்கள்**

கடுநாயக தள வான்படை முகாமில் விமான உதிரிப்பாக பிரிவில் ரேடார் ரிஸீவர் ஒன்று (LRU 02) மற்றும் அன்டெனா ஸ்கேனர் ஒன்று (LRU 01) 2014 ஏப்ரல் 25 திகதி திருத்த வேலைக்காக சீனாவுக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் எடுத்துச் சென்ற சந்தர்ப்பத்தில் மேற்கூறிய பண்டங்கள் காணாமல் போயுள்ள காரணத்தினால் இலங்கை வான்படைக்கு ரூபா 74,457,100 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. இந்த நட்டம் தொடர்பாக ஆரம்ப விசாரணை அறிக்கை 2015 ஆகஸ்ட் 31 திகதி சமர்ப்பித்திருந்ததுடன் நட்டத்தின் பெறுமதியினை பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரை இனங்கண்டு அறவீடு செய்வதற்காக இந்த அறிக்கை திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது.

## 2.7 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 5 வருட காலப்பகுதியில் இலங்கை வான்படைக்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு தொடர்பான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2013 | மீண்டுவரும் | 27,864.665 | 27,641.065 | 223.600 | 0.80 |
| | மூலதன | 17,032.925 | 6,577.690 | 10,455.235 | 61.38 |
| | **மொத்தம்** | **44,897.590** | **34,218.755** | **10,678.835** | **23.78** |
| 2014 | மீண்டுவரும் | 30,936.593 | 30,253.381 | 683.212 | 2.20 |
| | மூலதன | 12,878.670 | 12,357.124 | 521.546 | 4.04 |
| | **மொத்தம்** | **43,815.263** | **42,610.505** | **1,204.758** | **2.75** |
| 2015 | மீண்டுவரும் | 33,876.500 | 32,281.396 | 1,595.104 | 4.70 |
| | மூலதன | 19,298.000 | 17,244.174 | 2,053.826 | 10.64 |
| | **மொத்தம்** | **53,174.500** | **49,525.570** | **3,648.930** | **6.86** |
| 2016 | மீண்டுவரும் | 33,994.752 | 31,059.023 | 2,935.729 | 8.63 |
| | மூலதன | 19,659.000 | 4,401.146 | 15,257.854 | 77.61 |
| | **மொத்தம்** | **53,653.752** | **35,460.169** | **18,193.583** | **33.90** |
| 2017 | மீண்டுவரும் | 33,182.623 | 32,278.744 | 903.879 | 2.72 |
| | மூலதன | 8,642.885 | 5,533.730 | 3,109.155 | 35.97 |
| | **மொத்தம்** | **41,825.508** | **37,812.474** | **4,013.034** | **9.59** |

### (அ) ஒதுக்கீட்டுக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (i) மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருத்தல்

33 செலவு விடயங்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 2,748 மில்லியன் மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தமையால் அந்த செலவு விடயங்கள் தொடர்பான ஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 4,716 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அது தேறிய ஏற்பாடுகளில் 10 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. வழங்கியிருந்த பதிலின் பிரகாரம் சிட்டைகள் தாமதம் ஆதல், போதியளவு கட்டுநிதி கிடைக்காமை, கொள்வனவு செய்தல் அந்த ஆண்டிலேயே நடைபெறாமை, வெளிநாடுகளின் தொழிநுட்ப ஆலோசனைகளில் மேற்கொள்ளப்படும் விமானங்களின் திருத்த வேலைகள் மீளாய்வாண்டினுள் பூர்த்தி செய்யப்படாமை ஆகிய விடயங்கள் அந்த ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டுள்ளதை பாதித்திருந்தது.

**(ii) ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளைப் பயன்படுத்தல்**

இலங்கை வான்படையின் மூலம் நிறைவேற்றிக் கொள்வதற்காக எதிர்ப்பார்க்கப்பட்ட கருமங்கள் தொடர்பாக 04 வேறு அமைச்சுக்கள் மற்றும் 02 திணைக்களங்களினால் கூட்டுத்தொகை ரூபா 1,117.74 மில்லியனிற்கான இற்கான தொகையொன்று இலங்கை வான்படைக்கு மாற்றப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அவற்றில் கூட்டுத்தொகை ரூபா 932.46 தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வழங்கியிருந்த ஏற்பாடுகளில் ரூபா 185.28 மில்லியன் அதவாது 16.58 சதவீதத்திற்கான ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**2.10 மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம்**

இலங்கை வான்படையினால் 2017 ஆண்டின் போது 2 வருமானக் குறியீடுகளுக்கான கூட்டுத்தொகை ரூபா 2,847 மில்லியன் வருமானம் ஒன்று மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 3,150.2 வருமானம் ஒன்று சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பீட்டு வருமானத்தில் 110.6 சதவீதமாக இருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) வருமானக் குறியீடு 20.03.02.16 - விமான வாடகை வருமானம்**

(i) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருமானக் கணக்கின் படி கூட்டுத்தொகை ரூபா 14.22 மில்லியன் வருமானம் நிலுவையாகக் காணப்படடதுடன் அந்த நிலுவை வருமானம் 1 வருடம் முதல் 11 வருடங்களுக்கு இடைப்பட்ட கால வீச்சைச் சேர்ந்தவை நிலுவை வருமானத்தை அறவீடு செய்யும் தொடர் செயல் நடவடிக்கை பலவீன மட்டத்தில் காணப்பட்டது.

(ii) மீளாய்வாண்டினதும் கடந்த 03 ஆண்டுகளினதும் தேறிய வருமானம் சேகரித்தல் தொடர்பாக கவனம் செலுத்திய போது 2014 ஆண்டின் விமான வாடகை வருமானம் ரூபா 248.7 மில்லியன் ஆக காணப்பட்டதுடன் அந்த வருமானக் கிரமமாக குறைவடைந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 147.22 மில்லியன் தொகை வரை 40.80 சதவீதத்தினால் வருமானம் கீழிறங்கியிருந்தது.

**(ஆ) வருமானக் குறியீடு 20.03.06.00 - ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் செயற்பாட்டுக் கடமைகள்**

(i) கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த வருமானக் கணக்கின் படி கூட்டுத்தொகை 2.71 மில்லியன் அமெரிக்க டெலர்கள் நிலுவையாகக் காணப்பட்டதுடன், அந்த நிலுவை வருமானம் 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையான கால வீச்சை சேர்ந்தவையாகும். நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கான தொடர் செயல் நடவடிக்கை பலவீன மட்டத்தில் காணப்பட்டது.

(ii) நிதிப்பிரமாணம் 128(2) (இ) இன் பிரகாரம் நிலுவை வருமானம் தொடர்பாக அரையாண்டு அறிக்கை உரிய காலப்பகுதி முடிவடைந்த பின்னர் தொடர்ந்து வரும் மாதத்தினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்வாறு தயாரிக்கப்பட்டிருந்த நிலுவை வருமான அறிக்கை 2018 மார்ச் 13 ஆம் திகதியே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 2.11 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்

இலங்கை வான்படையின் 22401 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறை ந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 550 | 458.347 | 418 | 421.489 | 1,000 | 306.599 |

### நிலுவை கடன் மீதியை அறவீடு செய்யாமை

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன் மீதி தவிர ரூபா 16,094,133 தொகையாகக் காணப்பட்டதுடன், அந்த நிலுவை மீதி 01 வருடம் முதல் 5 வருடங்கள் மிகைத்த காலவீச்சொன்றில் காணப்பட்ட போதிலும் இந்த நிலுவை கடன் மீதியை அறவீடு செய்வதற்கான தொடர் செயல் நடவடிக்கை பலவீன நிலைமையில் காணப்பட்டது.

## 2.12 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

இலங்கை வான்படையில் பின்வரும் பதிவேடுகள் முறைப்படி மற்றும் நாளது வரை பேணப்பட்டிருக்காமையால் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (i) நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை / நிதிப் பிரமாணம் 502(2) இன் பிரகாரம் 11 ஆவது பிண்ணிணைப்பு | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளது வரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) கணினி, துணைக் கருவிகள் மற்றும் மென் பொருட்கள் மீதான நிலையான சொத்துக்கள் | 2002 நவம்பர் 28 திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | திறைசேரி சுற்றறிக்கை யின் பிரகாரம் கணினி கள், துணைக் கருவிகள் மென்பொருட்கள் மீதான |

| | |
|---|---|
| பதிவேடு | நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று நாளது வரை பேணப்பட்டிருக்காமை. |

## 2.13 இணங்காமைகள்

### 2.13.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|
| | | ரூபா. | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 104(4) | 3,742,077 | விமான பிரயாண சேவைகள் தொடர்பாக 07 அமைச்சுக்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை பதிவழிப்பதற்கு விதந்துரைக்கப் பட்டிருந்தது. |
| (ii) | நிதிப்பிரமாணம் 104(3) | 135,021,939 | 69 சம்பவங்கள் தொடர்பாக ஏற்பட்டிருந்த நட்டங்கள் தொடர்பாக 07 நாட்களுக்குள் அறிவத்தல் அல்லது பொது 283 படிவத்தின் பிரகாரம் ஆரம்ப அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2.14 நிலைபேறான அபிவிருத்தி

### நிலைபேறான குறிக்கோள்களை நெருங்குதல்

நிலைபேறான அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு நிகழ்ச்சி நிரல் இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டிக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்கான இலங்கை வான்படையினால் தனது நோக்கெல்லையின் கீழ் வருகின்ற கருமங்கள் தொடர்பாக செயற்பட வேண்டிய முறை தொடர்பாக அறிந்திருக்கவில்லை.

(அ) மேற்கூறியவாறு 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக இலங்கை வான்படை அறிந்திருக்காமையால், அதன் கருமங்கள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி, குறிக்கோள்கள், இலக்குகளை நோக்கி நெருங்க வேண்டிய திருப்பு முனைகள் மற்றும் இலக்குகளை நோக்கி நெருங்குவதை அளவீடு செய்வதற்கான சுட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஏதேனும் கருமம் ஒன்றின் சரியான செயலாற்றுகையை அளவீடு செய்வதற்காக சரியான தரவு முறைமையொன்று காணப்படல் கட்டாயமாக இருந்த போதிலும், நிறுவனத்தினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நோக்கி நெருங்குவதை அளவீடு செய்வதற்காக சரியான தரவு முறைமையொன்றினை உருவாக்கிக் கொள்வதற்காக செயற்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(இ) நிலைபேறான இலக்குகளை நோக்கி நெருங்குவதற்காக இலங்கை வான்படையினால் இனங்கண்ட கருமங்கள் வருடாந்த திட்டத்தில் உட்படுத்தியிருக்காததுடன் அந்த கருமங்களை நிறைவேற்றுவதற்கு தேவையான நிதி ஏற்பாடுகளை வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் உட்படுத்தியிருக்கவில்லை.

## 2.15 மனிதவள முகாமைத்துவம்

### 2.15.1 இணைக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

இலங்கை வான்படையின் செய்பணிகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள, உள்ளவாறான, வெற்றிட பதவியணி மீதான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்கான இலங்கை வான்படையினால் ஆளணி வேதனங்கள் செலவின தொகுதிக்காக ரூபா 26,469.5 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு ஆளுக்கான செலவு ரூபா 673,011 தொகை ஆக இருந்தது

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 08 | 07 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 03 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 184 | 92 | 92 |
| (iv) | ஆரம்ப நிலை | 3,019 | 2,458 | 561 |
| (v) | அமைய/ஒப்பந்த | 740 | 301 | 439 |
| (vi) | சேவை உத்தியோகத்தர் | 2,156 | 1,945 | 211 |
| (vii) | ஏனைய பதவிகள் | 35,844 | 34,524 | 1,320 |
| | மொத்தம் | 41,954 | 39,330 | 2,624 |